<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

MCOP No.399/2010 Date: 24.07.2025.

RW1- சண்முகம்

<u>சாட்சி மீண்டும் ஆஜரானதின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

டி.என்.23 ஏஏ 7855 என்ற லாரிக்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக என்று நான் கோப்புகளை ஆய்வு செய்து பார்த்தேனா என்றால், தேடிப்பார்த்தேன். நான் தேடி பார்த்ததில் மேற்படி வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தால் காப்பீடு வழங்கப்படவில்லை என்பது தெரிந்தது. எங்கள் நிறுவனத்தில் பராமரிக்கப்படும் கணினியில் கிடைத்த தகவல்களின் பதிவிறக்க நகல்கள் எ.ம.சா.ஆ.1. முதல் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தால் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றாலும், நான் சரியாக தேடிபார்க்காமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மனுதாரர்தான் தீங்கு இழைத்தவர் என்பதால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு செலுத்தாமல் தப்பிக்க உண்மையான ஆவணங்களை தாக்கல் செய்யாமல், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

ஒப்பம்/-சண்முகம்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.